


மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தலைமையிலான தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் தலைமை பணிமனையை கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், மாவட்ட கழகச் செயலாளர் இல.பத்மநாபன், கழக மகளிர் அணி துணை செயலாளர் முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் முன்னிலையில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். இதில் முன்னாள் அமைச்சர் அரா.சக்கரபாணி, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.ஜெயராமகிருஷ்ணன், மு.ஜெயக்குமார், சீனிவாசன், முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மதுராந்தகம் – தாராபுரம் இடைத்தேர்தல்:

# தி.மு.கழகத்திற்கு திராவிடர் கழகம் ஆதரவு!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப். 16–

தமிழ்நாட்டில் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கு, பொதுத் தேர்தல் நடைபெற்ற சில மாதங்களிலேயே அவசியமற்ற ஓர் இடைத் தேர்தல் திணிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் காலியாக உள்ள ஏழு தொகுதிகளில், பிற அய்ந்து தொகுதிகளின் வெற்றியை எதிர்த்துத் தேர்தல் வழக்கு இருப்பதால், அவற்றை விடுத்து இவ் விரண்டு தொகுதிகளுக்கும் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு தொகுதிகளிலும் முன்பு அ.இ.அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்றவர்கள், மக்கள் தங்களைத் தேர்ந்தெடுக்கக் காரணமான கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாக, போதிய தனிப் பெரும்பான்மை இல்லாத த.வெ.க. அரசு சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வாக்கெடுப்பு நடத்தியபோது அவரகளுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

**விசித்திரமான குதிரை பேரம்!**

பின்னர் சில நாட்களிலேயே தங்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளிலிருந்து விலகி, தலைமைச் செயலகத்துக்குள்ளேயே அமைச்சரைச் சந்தித்து த.வெ.க. வில் இணைந்து விட்டதாகக் கூறிய, தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத விசித்திரமான ‘குதிரை பேரம்’ நடைபெற்றது.

அதன் விளைவாக திணிக்கப்பட்டுள்ள இந்த இடைத்தேர்தல் அக்டோபர் 6 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதில் கட்சி மாறி வந்தவர்களுக்கே வேட்பாளர்களாக மீண்டும் இடமளித்துள்ளது ஆளுங்கட்சி! இது அரசியல் அறவழியா? அவர்கள் முன்பு போட்டியிட்டு வெற்றிபெற்ற அ.இ.அ.தி.மு.க. இப்போது வேறு வேட்பாளர்களை அறிவித்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வழக்குரைஞர் பரந்தாமன் அவர்கள் மதுராந்தகம் தொகுதிக்கும், வழக்குரைஞர் சுகன்யா அவர்கள் தாராபுரம் தொகுதிக்கும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

சட்டமன்றப் பொதுத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெறாத த.வெ.க.வுக்கு, அப்போது தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சில கட்சிகள் ஆதரவளித்து, ஆட்சியிலும் பங்கு பெற்றன. கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் வெளியில் இருந்து ஆதரவு என்ற நிலைப்பாட்டை எடுத்தன.

**மக்களின் வரிப்பணம் அல்லவா?**

ஆனால் அதையும் தாண்டி, த.வெ.க.வுக்கு ஏற்பட்ட அச்ச உணர்வின் காரணமாக, அ.தி.மு.க.வில் இருந்து சில சட்டமன்ற உறுப்பினர்களை ஆசைகாட்டி இழுத்தனர். அதனால் கட்சித்தாவல் சட்டப்படி அவர்களின் பதவி பறிக்கப்படும் சூழல் ஏற்படும் என்பதால், அவர்களைப் பதவி விலகச் செய்து தற்போது இடைத்தேர்தல் நடைபெற வேண்டிய அவசியத்தை உருவாக்கியுள்ளனர்.

இதற்கான தேவை என்ன?



இந்த தேர்தல் நடைபெறுவதற்கு செலவழிக்கப்படும் தொகை மக்களின் வரிப்பணம் அல்லவா?

இதை வீணடிக்க யார் உரிமை தந்தது? இந்தத் தேர்தலைத் திணித்து மக்கள் பணத்தை வீணடிக்கக் காரணம் யார் என்பதை மக்கள் அறிய மாட்டார்களா?

தற்போது ஆட்சிக்கான பெரும்பான்மையில் எந்தப் பிரச்சினையுமில்லை.

இந்த இடைத் தேர்தல் வெற்றி தோல்வி, ஆட்சியில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடாது என்ற நிலையில், நடைபெறவுள்ள இடைத் தேர்தலின் முக்கியத்துவம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்த்து, அதற்கேற்ப மக்கள் வாக்களிக்க வேண்டியது அவசியமாகும்.

**இடைத் தேர்தல் என்பது எடைத்தேர்தலே!**

கடந்த 120 நாட்களாகத் தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் த.வெ.க. ஆட்சியின் செயல்பாடுகளை அளவிடுவதற்கான வாய்ப்பே இந்த இடைத் தேர்தல்! பொதுவாக இடைத் தேர்தல்கள் என்பவையே, அரசை எடைபோட்டுப் பார்க்கும் தேர்தலே!

அப்படி எடை போட்டுப் பார்த்தால் இந்த நான்கு மாதங்களில் ஆட்சியில் நடைபெற்றவை என்ன?

1. தமிழ்நாட்டில் இதுவரை அறிந்திராத குதிரை பேரங்களும், கட்சித் தாவல்களும், நமது அரசியல் மாண்பைக் கேலிக்கு உள்ளாக்கியுள்ளன. அந்தச் சூழ்நிலைக்கு இலக்கான இரண்டு தொகுதிகளில் தான் இப்போது இடைத்தேர்தல் நடைபெறுகிறது. வாக்களித்த மக்களின் முடிவுக்கு எதிராகவே, கட்சி மாறிய வேட்பாளர்கள் இப்போது மீண்டும் வருகின்றனர்.

2. தமிழ்நாட்டின் சட்டம் – ஒழுங்கு சீர்குலைந்துவரும் செய்திகள் அன்றாடம் வந்து கொண்டிருக்கின்றன. கொலைகளும், கூலிப் படைகளும், பாலியல் வன்கொடுமைகளும், ஆணவப் படுகொலைகளும் மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன.

3. தமிழ்நாட்டை, ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்காமல், மக்களைப் பாதுகாத்து வந்தது கடந்த தி.மு.க. ஆட்சி. ஆனால், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்ற பெயரில் நடைபெற்றுவந்த 100 நாள் வேலைத் திட்டத்தை வீணடிக்கும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த திட்டத்தை ஏற்றுக் கையொப்பமிட்டிருக்கிறது தற்போதைய த.வெ.க. அரசு.

4. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும், பொருளாதார வளர்ச்சியையும் விரிவாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்புத் திட்டங்களை இந்த அரசு கைவிட்டுள்ளது. அவற்றுள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவக் கூடிய பரந்தூர் விமான நிலையத் திட்டம், பரந்தூர் வரையிலான மெட்ரோ விரிவாக்கம், உலகளாவிய விளையாட்டு நகரம், கிழக்குக் கடற்கரைச் சாலை மேம்பாலத் திட்டம், சென்னை கிண்டி – வேளச்சேரி மேம்பாலத் திட்டம் ஆகியவை வெளிப்படையாகக் கைவிடப்பட்டு விட்டன. இன்னும் பல திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

5. தேர்தலில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருப்பதற்கான காரணங்களைத் தேடிக் கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு. திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவந்த மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் மகளிர் உரிமைத் தொகையை ரூ.2500 ஆக உயர்த்தித் தருவோம் என்ற வாக்குறுதியைத் த.வெ.க. நிறைவேற்றவில்லை.

அனைத்து வீடுகளுக்கும் ஆறு சிலிண்டர்கள் தருவோம் என்று சொன்னதை, தகுதி உடையவர்களுக்கு மூன்று சிலிண்டர் என்று மாற்றி, சொன்னதற்கு மாறாக நடந்து கொள்கிறது த.வெ.க. அரசு.

6. ஆதரவு அளித்துள்ள கட்சிகளே, இந்த அரசின் பல நிலைப்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. காட்சிகளே நிரம்பியிருக்கின்றனவே தவிர, ஆட்சி சரியாக நடைபெறுகிறதா?

7. நிதிநிலையைக் காரணம் காட்டி, மக்கள் நலத் திட்டங்களைத் தவிர்க்கும அரசு, ரூ.1200 கோடி செலவில் புதிய தலைமைச் செயலகம் என்றும், பல கோடி செலவில் முதலமைச்சர் அலுவலகம் மாற்றம் என்றும் தேவையற்றவற்றுக்குச் செலவழிக்கும் அவலம்.

8. ஒன்றிய பா.ஜ.க. அரசின் தேசியக் கல்விக் கொள்கையின் அம்சங்களை நிறைவேற்ற மறைமுகமாகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனியார் பல்கலைக்கழகங்களுக்குச் சாதமாகச் சில சட்டங்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

9. மக்கள் நலத் திட்டங்களுக்கு எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பணியாற்றாமல், அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் கைது, வழக்குகள் தொடர்வதிலேயே இந்த அரசு குறியாக இருப்பதுடன், அதற்கு முகாந்திரங்கள் இல்லை என்று நீதிமன்றங்களின் கண்டனங்களையும் பெற்றுள்ளது. இதுவே, இதன் காழ்ப்புணர்ச்சிக்கு அடையாளமாகும்.

10. தமிழ்நாட்டு சட்டமன்றத்தில், தேர்தல் தொகுதி மறுவரையறைப் பற்றி, எதிர்க்கட்சிகள் உள்பட அனைவரின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றாக இருக்க, உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நடந்த தென்மண்டல முதலமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்ற பின், அந்த முடிவு மாற்றப்பட்டதே, இது நியாயந்தானா? உரிமையை அடகு வைத்த கொடுமையல்லவா?

இன்னும் இந்த 120 நாட்களில் நடைபெற்றுள்ள மக்கள் நலத் திட்டங்கள் என்று சொல்வதற்கு எதுவுமில்லை என்பதே தற்போதைய நிலை.

**தி.மு.கழகம் நமது ஆதரவு!**

இந்த இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற வேண்டியது அவசியமான ஒன்றாகும். கடந்த அய்ந்து ஆண்டுகளில் சிறப்பான ஆட்சியை வழங்கினாலும், மக்களின் மாறுபட்ட முடிவின் காரணமாக எதிர்க்கட்சியாக ஆக்கப்பட்டபோதும், ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டு மக்களுக்காகக் குரல் கொடுத்து வருவது திராவிட முன்னேற்றக் கழகமே!

இன்னும், தனது பா.ஜ.க. கூட்டணியை விடாமல், அவர்களுடன் இணைந்தே போட்டியிடுகிறது அ.இ.அ.தி.மு.க! தமிழ்நாட்டில் பா.ஜ.க கூட்டணி என்பது முற்றிலும் தோற்கடிக்கப்பட வேண்டிய கூட்டணியே ஆகும்.

இந்தத் தேர்தலில், தி.மு.க. வெற்றி பெறுவதன் மூலம் த.வெ.க. அரசுக்கு ஒரு பாடம் கற்பிக்க முடியும். அதன் தவறான நிலைப்பாடுகள், போக்குகள், அரசியல் காழ்ப்புணர்ச்சி ஆகியவை மக்களுக்கு விரோதமானவை என்பதை எடுத்துச் சொல்லி திருத்த முயலும் மாறுபட்ட மக்கள் தீர்ப்பு. ஆரோக்கிய அரசியல் உருவாக தோல்வி ஒரு பாடமாக ஆவதற்கு, இந்த இடைத் தேர்தல் ஒரு முக்கியமான வாய்ப்பாகும்.

எனவே, நான்கு மாத த.வெ.க. ஆட்சிக்குப் பாடம் கற்பிக்கவும், ஜனநாயகத்தின் மாண்பையும் கருதி, இவ் விரு தொகுதி மக்களும் தி.மு.க. வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டும் என்று திராவிடர் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

போதிய பெரும்பான்மை ஆளுங்கட்சிக்கு இல்லை என்ற நிலையில், த.வெ.க.வுக்கு ஆதரவு கொடுத்த கட்சிகளே, ஆளுங்கட்சியின் நடவடிக்கைகளுக்கு விமர்சனமும், எதிர்ப்பும் தெரிவிக்கும் நிலையில், சட்டமன்ற நடவடிக்கைகளின் மரபும், மாண்பும் காணாமல் போன விசித்திரத்தை உருவாக்கிய ஆளுங்கட்சித் தோற்றால், தங்களது அதிகார, ஆணவம்பற்றி அவர்களே உணர்ந்து, மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள தி.மு.க.வின் வெற்றி உதவும் அல்லவா!

திராவிடர் கழகத்தின் முழுமையான ஆதரவை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்கி, பிரச்சாரத்திலும் கழகம் ஈடுபடும்!

மயக்கமின்றி, தயக்கமின்றி இரண்டு தொகுதி வாக்காளப் பெருமக்களும் ஆழ்ந்து சிந்தித்து, வாக்களித்து தி.மு.க.வை வெற்றி பெற வைத்தால், அது ஒரு நல்ல அரசியல் திருப்பம் ஆகும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.




கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு சென்னை அண்ணா அறிவாலயம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருக்கும் காட்சி.

# உன் பெயர் சொல்லாமல் அரசாள இயலாது!

அண்ணா!

காலவெளியில்
உன் இருப்பு சிறிதுதான்

நீ வாழ்ந்தது
59.4 ஆண்டுகள்

உன் பொதுவாழ்வு
35 ஆண்டுகள்

கட்டியெழுப்பிய கட்சியோடு
19.5 ஆண்டுகள்

ஆட்சிப் பொறுப்பில்
வெறும் 22 மாதங்கள்

ஆனால்,
நீ செய்த சாதனை புரிய
300 ஆண்டு
வாழ்ந்தவனாலும் முடியாது

உன் பெயர் சொல்லாமல்
அரசாள இயலாது
உன் கொள்கை இல்லாமல்
அரசியல் கிடையாது



நீ
சாமானியர்க்காகவே வாழ்ந்தவன்;
சாமானியனாகவே மரித்தவன்

பூமியின் மீது
அதிகச் சிலைகள் புத்தருக்கு;
இந்தியாவில் அம்பேத்கருக்கு;
தமிழ்நாட்டில் உனக்கு

பொன்னடிகளுக்குப்
புகழ் வணக்கம்



கவிப்பேரரசு
**வைரமுத்து**

# மாணவன் தமிழ்ச்செல்வன் மரணத்திற்கு நீதி கேட்டு போராடுபவர்களை கைது செய்வதா?

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை, செப். 16 –

மாணவன் தமிழ்ச்செல்வன் மரணத்திற்கு நீதி கேட்டு போராடுபவர்களை கைது செய்வதா? என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சமூக வலைதளப் பதிவு வருமாறு: –

மாணவன் தமிழ்ச்செல்வனின் மரணத்திற்கு நீதி கேட்டு போராடும் அவரது உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் மீது காவல்



துறையை ஏவி அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது த.வெ.க. அரசு.

உடற்கூறு ஆய்வில் அம்மாணவன் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதற்கான தடயங்கள் இருப்பதாகச் சொல்லப்படும் நிலையில், குற்றத்தை விசாரித்து உண்மையான குற்றவாளிகளை கைது செய்ய வேண்டிய காவல்துறை, நீதி கேட்கும் மக்களை கைது செய்வது கடும் கண்டனத்திற்குரியது.

குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயங்கிவிட்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்தினரையே ஒடுக்கும் கேடுகெட்ட ஆட்சியாக இந்த த.வெ.க. ஆட்சி உள்ளது.

இவ்வாறு அவர் பதிவு செய்துள்ளார்.

### மதுராந்தகம் இடைத்தேர்தல்: கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன்

# மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைச் செயலாளர்கள் - கழக நிர்வாகிகளைச் சந்தித்தார்!

சென்னை, செப். 16 -

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் கழக வேட்பாளரும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் ஆலோசனையின்படி நேற்று முன்தினம் - அத்தொகுதியிலுள்ள மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட 35 ஊராட்சிகளைச் சேர்ந்த கழகக் கிளைச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை நேரில் சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், செய்யூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பனையூர்



பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், மதுராந்தகம் தெற்கு ஒன்றியச் செயலாளர் சிவகுமார் முன்னிலையில் அவ்வொன்றியத்திற்கு உட்பட்ட சரவம்பாக்கம், பெருவேலி, நல்லகாமூர், காட்டுத்தேவகாத்தூர், தொன்னாடு, நீர்பெயர், வேட்டூர், ஜமீன் பூதூர், இரும்பேடு, நல்லூர், விராலூர் ஓணம்பாக்கம், பெரிய வெண்மணி, அரியனூர், நெசப்பாக்கம், சின்ன வெண்மணி, நெட்ரம்பாக்கம், ஜமீன் எண்டத்தூர், கீழ்கண்டை, முருகம்பாக்கம், குன்ற த்தூர், வீராணகுன்னம், காவவாத்தூர், தேவவாத்தூர், அருங்குணம், புளியரணங்கொட்டை, அவூரி மேடு, நேத்தப்பாக்கம், சிறுநல்லூர், வில்வராய நல்லூர், கென்றச்சேரி, முன்னூத்தி குப்பம், கினார், சிலாவட்டம், பாக்கம் ஆகிய 35 ஊரட்சிகளிலும்; கழகத்தின் கிளைச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளை நேரில் சந்தித்தார்.